## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்-03** **நாள் : 10. 01. 2018**

### பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் சென்னைப் பள்ளிகளுக்கிடையே 2017-2018 கல்வியாண்டிற்காக நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12,63,600./ மதிப்பிலான பரிசினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் சென்னைப் பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற 2017-2018 கல்வியாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12,63,600./ மதிப்பிலான பரிசினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2018) நேரு உள்விளையாட்டரங்கில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 211 சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 85,910 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். சென்ற 2016-2017ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 93.1 சதவீதமும், 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 88.7 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவ, மாணவியர்கள் கல்வி பயிலும் வகுப்பிற்கான முழு திறன்களை மேம்படுத்த சிறந்த கல்வியை அளிப்பதுடன், அவர்களின் பன்முகத்தன்மையை மேம்படுத்திட பல்வேறு போட்டிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, சென்னைப் பள்ளிகளுக்கிடையேயான வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது. தற்பொழுதைய கல்வியாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

1 - 3, 4 - 5, 6 – 8 என்ற வகுப்பு வாரியாக மண்டல அளவில் உதவிக் கல்வி அலுவலர் தலைமையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு 2,580 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3,63,000/- மதிப்பீட்டிலான பரிசுகள் வழங்கப்பட்டது. மண்டல அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகள் வாரியாக முதல் இடம் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு மண்டலத்திற்கு தலா 46 மாணவ, மாணவியர்கள் வீதம் மொத்தம் 460 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டதில் வெற்றி பெற்ற 138 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.69,000/- மதிப்பீட்டிலான கோப்பைகள் வழங்கப்பட்டது.

உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கல்வி மாவட்ட வாரியாக (கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தியம்) தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 2688 மாணவ, மாணவிகளுக்கு ரூ.6,24,600 மதிப்பீட்டிலான கோப்பைகள் வழங்கப்பட்டது. அனைத்து தொடக்கப் பள்ளிகள் முதல்

மேல்நிலைப் பள்ளிகள் வரை பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று அதிகப் புள்ளிகள் பெற்ற 12 மாணவ, மாணவிகளுக்கும், மாநில அளவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 10 மாணவ, மாணவிகளுக்கும், மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபெற்ற 20 மாணவ, மாணவியர்களை பாராட்டி ரூ.40,000 மதிப்பீட்டிலான தனித்திறன் கோப்பைகள் வழங்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்று தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது.

2017-2018ம் கல்வியாண்டிற்காக நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற சென்னைப் பள்ளிகளைச் சேர்ந்த 35,000 மாணவ, மாணவியர்களில், வெற்றி பெற்ற 5,586 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12,63,600 மதிப்பிலான பரிசுப் பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கல்வி அலுவலர் திருமதி டி.ரஞ்சனி மற்றும் உதவிக் கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**